MCOP.No. 393/2024 Call with MCOP.No. 399/2024

Date : 07.07.2026

Witness Name & Rank - பேச்சிமுத்து - PW1

**சாட்சி அழைக்கப்பட்ட 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது. 1 மற்றும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டியது நான் தான் என்றால் சரிதான். என் மீது மோதியதாக சொல்லப்படும் லாரியின் பின் பகுதியில் மோதி தான் விபத்து நிகழ்ந்து என்றால் சரிதான். நானும் எனது மகனும் இருசக்கர வாகனத்தில் பேசிக்கொண்டு சென்று எங்களது கவனக்குறைவால் லாரியின் பின் பகுதியில் மோதி விபத்து நிகழ்ந்தது என்றால் சரியல்ல. 28.06.2024 க்கு பிறகு நான் தொடர் சிசிச்சையில் உள்ளதை காட்டஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை எனவே எனக்கு ஏற்பட்ட காயம் பூரண குணம் அடைந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் தற்போது சலூான் கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் குணம் அடைந்துவிட்டது எனக்கு விபத்தால் நிரந்தரவருமான இழப்போ அல்லது நிரந்தர ஊனமோ இல்லை என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து நிகழ்ந்துள்ளதால் 3 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.